384

மலரும் உள்ளம்

அழ. வள்ளியப்பா

7-MAR 1945
MADRAS



புத்தக நிலையம்

மலரும் உள்ளம்

7-MAR 1945
MADRAS
894·8111
1946

அழ. வள்ளியப்பா

விலை அணு 12

புத்தக நிலையம்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரை

"தமிழிசை" முழங்குந் தமிழகத்தே இலக்கிய மறு மலர்ச்சி விரைந்து மலர்கின்றது. உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளிந்த செந்தமிழ் நடையில் இனிய கவிகளை யாத்துத் தமிழுலகிற் களித்துப் புகழ்கொண்டார் பல கவிஞர்கள். அம்முறையே நம் இளங்கவிஞர் **அழ. வள்ளியப்பா** அவர்கள் தம் தூய உள்ளத்தே கருக் கொண்டு அரும்பி மலர்ந்த அருங்கவிகளை, தமிழுலகம் சுவைத்துணர **"மலரும் உள்ளம்"** என்னும் நூலாக உதவியுள்ளார். கவிகள் யாவும் இனிய எளிய நடை யுடையன. பயில்வோர் மனக்கண்முன் இயற்கையின் இயல்பை நிறுத்தும் இயல்பின. இந்நூலைப் பதிப்பித் தற்கு எமக்கு உரிமையளித்த ஆசிரியர் அவர்கட்கு எமது நன்றி உரித்தாக.

திரிசிரபுரம்
20-12-'44

புத்தக நிலையத்தார்

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS

ஆக்கியோன் முன்னுரை

தற்காலத்தில் தமிழ் நாட்டில் சிறுவர் சிறுமியர்களுக்காகப் புத்தகங்களும், பத்திரிகைகளும் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அந்த நன் முயற்சியிலே கலந்துகொள்ளவேண்டும் என்பது எனது ஆசை. அதிலே ஓர் ஆர்வம். அந்த ஆர்வத்தில் எழுதப்பட்டவைகளே இப் பாடல்கள்.

இயன்றவரை எல்லாப் பாடல்களும் எளிய நடையிலும், கருத்துடையனவாகவும் இருக்கவேண்டும் என்பதே எனது நோக்கம். அதற்கேற்றவாறே முயற்சியும் செய்துள்ளேன். தமிழ் மக்கள் இதனைப்படித்து இன்புற்றால் அதுவே எனது மகிழ்ச்சி.

நம் நாட்டில் ஏராளமான கவிஞர்கள் தோன்றி மணங் கமழும் சிறந்த மாலைகளைத் தமிழன்னைக்குச் சூடி வருகின்றனர். அவற்றுடன் இச்சிறிய மாலையையும் தமிழன்னை ஏற்று எனக்கு ஊக்கம் அளிப்பாளாக.

இப்பாடல்களைப் புத்தக உருவில் கொண்டுவர உதவியும், ஊக்கமும் அளித்த திருமிகு T. ஐயன்பெருமாள் கோனர் (Lecturer in Tamil, St. Joseph's College, Trichy) அவர்களுக்கும், திருமிகு கு. மதுரை முதலியார் (Ex-lecturer in Tamil, Loyola College, Madras) அவர்களுக்கும், வெளியிட முன்வந்த புத்தக நிலையத்தாருக்கும் எனது நன்றி.

இராயவரம்
28–12–'44 } அழ. வள்ளியப்பா

1946

உள்ளுறை

		பக்கம்
1.	கலைமகள் துதி	... 1
2.	மலர்	... 2
3.	கண்ணாடி	... 4
4.	கன்றுக்குட்டி	... 6
5.	மலையும் வாழ்வும்	... 8
6.	சுதந்திர வாழ்வு	... 11
7.	அன்னையின் அன்பு	... 13
8.	காந்தித் தாத்தா	... 16
9.	மனமாற்றம்	... 19
10.	அழைக்கும் விதம்	... 22
11.	அன்னையின் அனுமதி	... 23
12.	கருங்கடல்	... 25
13.	நிழல்	... 26
14.	பறவை வரம்	... 28
15.	ஏமாற்றம்	... 30
16.	குணங்கள்	... 33
17.	நிலைத்த ஆலமரம்	... 36
18.	பல் உடைந்த முருகையன்	... 38
19.	மழை	... 40
20.	பிறர்பொருள் விரும்பேல்	... 42
21.	சமயோசித புத்தி	... 44
22.	வெண்ணிலா	... 47
23.	தாலாட்டு	... 50

கலைமகள் துதி

கலைகளைப் பெற்றுத் தந்தாய் ;
கற்பவர் போற்றுந் தாயே ;
உலகினில் நிலையாம் செல்வம்
உன்னிடத் துதித்த தன்றோ!

நிலையிலா வாழ்வு தன்னில்
நிலைத்திடும் அறிவின் பேறே!
மலரினில் விளங்கும் நின்னை
மனத்தினில் விளங்க வைத்தேன்.

மலர்

இன்முகம் காட்டிடுமே—அதனால்
இன்பமும் ஊட்டிடுமே.
நன்மணம் வீசிடுமே—சுற்றி
நான்கு திசைகளுமே. 1

வண்டுகள் தேன்விரும்பி—நாடி
வந்திடும் மொய்த்திடவே.
கண்டவர் யாவரையும்—இதனது
காட்சி மயக்கிடுமே. 2

ஈசன் திருவடியில்—இதுவே
என்றென்றும் நின்றிடுமே.
பாசத்தால் மக்களுமே—இதனைப்
பறித்துச் சூடுவரே. 3

மணம் நடக்கையிலே—அங்கே
மணத்தை வீசிடுமே.
குணம் பெரிதாகும்—ஆனல்
குற்றம் எதுவுமில்லை. 4

மலர் எனஉள்ளம்—நமக்கு
மலர வேண்டுமடி.
பலரும் போற்றிடவே—உலகில்
பண்புடன் வாழ்வோமடி. 5



கண்ணாடி

கண்ணா டியையே என்முன்னே
கையில் வைத்து நின்றிடுவேன்.

பற்பல விதமாய்ச் செய்கையெலாம்
பார்த்தே அதனில் செய்திடுவேன்.

சிரித்தே நானும் வேடிக்கை
செய்வேன், அதுவும் செய்திடுமே.

“கொன்றிடு வே”னென வீரலைநான்
கோபமா யெதிரே நீட்டிடுவேன்.

"நானும் அப்படித் தான்" என்றே
நன்கு திருப்பிச் செய்திடுமே.

எப்படி எப்படிச் செய்தாலும்
என்போ லதுவுஞ் செய்திடுமே.

நன்மை செய்தால் நன்மைதான்
நம்மை நாடி வந்திடுமே.

தீமை செய்தால் தீமைதான்
திரும்பி வந்து சேர்ந்திடுமே.

கன்றுக்குட்டி

கன்றே, கன்றே ஓடிவா
காளைக் கன்றே ஓடிவா
இன்றே கூடி இருவரும்
இன்ப மாகப் பேசுவோம். 1

" அம்மா " என்றே நாங்களும்
அழைக் கிறோமே அன்னையை.
" அம்மா " என்றே நீயுமே
அழைப்ப தெங்கள் பாடமோ ? 2

முட்டி மடியிற் பாலினை
முழுதும் கொணர்ந்து சேர்க்கிறாய்.
கட்டி உன்னைப் போட்டுமே
கறக் கிறார்கள் பாலையே. 3

பற்கள் முளைக்கும் நாள்வரை
பாலைக் குடித்தே இருந்திடு.
புற்கள் முளைத்த பூமிக்குப்
போவோம் அன்றே நன்றாக. 4

பாலைக் குடித்த பின்னரே
வேலை யேதும் இன்றியே.
வாலைத் தூக்கி விரைவாக
வளைந்து குதித்து ஓடிடுவாய். 5

காளைக் கன்றே உன்போலக்
கட்டுத் தேகம் கொண்டே நான்,
கோழைத் தனத்தை அகற்றியே,
கொடிய வினையை எதிர்ப்பேனே. 6

வளர்ந்து நீயும் காளையாய்
வண்டி யிழுக்கப் போகிறாய்
வளர்ந்து நானும் மனிதனாய்
வதைத்து வண்டி ஓட்டிடேன். 7

சொரிந்து உன்றன் மேனியைச்
சொல்லும் என்றன் சொல்லினை
'சரிதான்' என்றே ஏற்றுநீ
தலையை ஆட்டிக் காட்டுவாய். 8

7 MAR 1945
MADRAS

மலையும் வாழ்வும்

திருப்பதி மலைக்குச் செல்வதெனத்
தீர்மானித்தார் என் தந்தை.

“என்னையும் அழைத்துச் சென்றிடுவீர்”
என்றே அவரை நான் வேண்ட

“சரி” எனக் கூற ஒருநாளில்
தந்தையும் நானும் புறப்பட்டோம்.

மலையில் ஏறிச் சென்றிடவே
மயக்கம் வந்தது என்றனுக்கே.

“களைப்பொடு மயக்கம் வருகிறது
காலும் அத்துடன் வலிக்கிறது.

எத்தனை தூரம் இனியும்நாம்
ஏறிட வேண்டும்?" என்றேனே.

"இன்னும் கொஞ்சம் தூரந்தான்
ஏறிடு வா" யென அழைத்திட்டார்.

வழியினில் உட்கார்ந் துட்கார்ந்து
வந்தோம் மலையின் உச்சிக்கே.

மணிகளும் மூன்று ஆயினவே
மலையின் உச்சி யடைந்திடவே.

திவ்விய தரிசனம் செய்திட்டோம்
தின்ன உணவும் பெற்றிட்டோம்.

பெறுதற் கரிய காட்சியினைப்
பெற்றோம் அன்று வாழ்வினிலே.

மலையைக் கடந்து இறங்கிடவே
மறுநாட் காலை புறப்பட்டோம்.

'விறுவிறு' எனவே கீழ்நோக்கி
விரைவில் இறங்கி வந்திட்டோம்.

சிரமம் சிறிதும் இல்லாது
சீக்கிர மாக வந்திட்டோம்.

மலையின் கீழே இறங்குதற்கு
மணிகள் இரண்டே ஆயினவே.

அடியில் வந்ததும் தந்தையெனை
அருகில் அழைத்தே கூறிட்டார்.

"சென்றிட மலைக்கே மூன்றுமணி
சென்றன ; அத்துடன் சிரமங்கள்

வந்தன நமது வழியெல்லாம்
வாழ்வும் அதுபோ லுணர்ந்திடுவாய்.

பெரியோ ரெனவே பெயரெடுக்கப்
பெரிதும் துன்பம் வழிமறைக்கும்

நாட்கள் பலவும் ஆவலொடு
நம்பித் துன்பம் கடந்திடுவர்.

இறங்குதல் போல எளிதன்று
இம்மண் ணுலகில் பெரியோராய்

ஆவது" என்றே கூறிட்டார்
அன்றொரு பாடம் கற்றனனே.

சுதந்திர வாழ்வு

சுதந்திரமில் லாத வாழ்வு
துக்க மாகுமே—மிக்க
துக்க மாகுமே.
விதம்விதமாய் இன்னல்களும்
விளைந்து சேருமே—என்றும்
விளைந்து சேருமே. 1

கூட்டைவிட்டு விடுதலையைக்
கொண்ட கிளியதாய்—நன்கு
கொண்ட கிளியதாய்
நாட்டைவாட்டும் அடிமை வாழ்வை
நாம் விடுவோமே—இன்று
நாம் விடுவோமே. 2

சாதிமத பேதமின்றித்
தழைத்து வாழ்வோமே—நன்கு
தழைத்து வாழ்வோமே
"நீதியார்க்கும் ஒன்று" என்றே
நினைத்து வாழ்வோமே—என்றும்
நினைத்து வாழ்வோமே. 3

நாளைவாழ்வு தன்னில் நாமே
நாட்டை ஆள்பவர்—இந்த
நாட்டை ஆள்பவர்.
கோழை எண்ணம் விட்டவாழ்வு
கொண்டு நிற்போமே—வாழ்வு
கொண்டு நிற்போமே. 4

ஏட்டிலுள்ள உண்மையெல்லாம்
எடுத்துச் செய்வோமே—இங்கு
எடுத்துச் செய்வோமே.
நாட்டுமக்கள் உயர்வுபெற
நாமுழைப் போமே—ஒன்றி
நாமுழைப் போமே. 5

பலத்தைக்கொண்டு உலகவாழ்வைப்
பாழ்படுத் தோமே—வாழ்வைப்
பாழ்படுத் தோமே.
நலத்தைக்கொண்டு உலக வாழ்வில்
நன்மை செய்வோமே—நாங்கள்
நன்மை செய்வோமே. 6

பாரதம்போல் உலகிலேயே
பண்புள்ள பூமி—மிக்க
பண்புள்ள பூமி,
வேறெதுவும் இல்லையென
விளங்க வைப்போமே—என்றும்
விளங்க வைப்போமே. 7

அன்னையின் அன்பு

பத்துமா தங்கள் கஷ்டமிகப் பட்டுப்
பாரினில் என்னையே கொண்டுவந்தாள்
எத்தனை கஷ்டங்கள் நேர்ந்திடினுமவள்
என்றுமே இன்முகம் காட்டிடுவாள். 1



அம்மா பக்கத்தில் தூங்கிடும் போதுநான்
அழுது 'ஓ'வெனக் கத்திடுவேன்
"சும்மா தூங்கிடு, ஆராரோ" எனச்
சொல்லுவள் தாலாட்டுத் தூக்கமின்றி. 2

201—2

குழந்தை யெனக்கு நோயெனக் கண்டிடின்
கொஞ்ச உணவேனும் கொள்ளமாட்டாள்
பழகிய பாட்டிகள் வீட்டுக்கு வந்திடின்
பக்குவ மெல்லாம் கேட்டறிவாள். 3

மாந்தம்போ லேசில வியாதிகள் எனக்கு
மாறி, மாறி வந்த காலமெல்லாம்,
சாந்தமாய் என்றன் பக்கமி ருந்தவள்
தக்க மருந்துகள் தந்திடுவாள். 4

பள்ளிக் கூடம்செல்ல வழியனுப் பியவள்
பார்த்து நிற்பாள்தலை மறையுமட்டும்.
பள்ளிக் கூடம்விட்டு வந்தது மேயவள்
அள்ளியே வாரி யணைத்திடுவாள். 5

மார்பி லணைத்தே மடியி லிருத்தி
வட்டியில் சாதத்தை வைத்துக்கொண்டே
"ஓர்வாய், ஓர்வாய், உண்டிடு வாயெ"ன
ஊட்டி நானுண்டிடக் கண்டிடுவாள். 6

"ஆரவர்?" என்றே வீட்டுக்கு வந்தோரை
அன்னையும் காட்டியே கேட்டிடுவாள்
நேரிய வழியில் கூறும் மழலையில்
நினைவு மறந்து மகிழ்ந்திடுவாள். 7

சித்திரக் காரன் எழுதும் படத்தினில்
சிந்தனை யெல்லாம் செலுத்துதல்போல்,
அத்தனை கவனமும் அன்புட னென்மேல்
ஆர்வமாய் அன்னை செலுத்திடுவாள். 8

இத்தனை அன்புடன் வளர்த்திடு மன்னைசொல்
என்றுமே தட்டாது கேட்டிடுவோம்
அத்தனை செய்கைக்கும் அதுவே கைம்மாறு
அறிந் துணர்ந்து நடந்திடுவோம். 9

அப்பாவுக்குமரி யாதை செலுத்தினும்
அன்னையிடம் தான்அன்பு எலாம்
இப்பாரோர் எவர்க்கும் இதுதானியற்கை
இன்பத்தாய் வாழவே போற்றிடுவோம். 10

காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா நம்தாத்தா
கருணை மிக்க பெருந்தாத்தா
சாந்த மூர்த்தி. என்றென்றும்
சத்திய மூர்த்தி நம்தாத்தா. 1

ராட்டைச் சுற்றி நூற்பதிலே
நாளும் சிலமணி போக்கிடுவார்,
நாட்டு மக்கள் நலமெண்ணி
நமது தாத்தா சிறைவாழ்ந்தார். 2

உச்சிக் குடுமித் தலையுடனே,
உடுப்பது நாலு முழந்தானே
பச்சைக் குழந்தை போலெண்ணம்
படைத்தவர் நமது பெருந்தாத்தா. 3

வளரும் குழந்தைக் கிருபற்கள்
வாயின் நடுவே கண்டிடலாம்.
வளர்ந்த நமது தாத்தாவின்
வாயில் அவ்விடம் பல்லில்லை. 4

ஆட்டுப் பாலுடன் கடலையினை
அவரும் உண்டு அன்பாக,
நாட்டின் விடுதலை எண்ணமொடு
நல்ல தொண்டு பலசெய்தார். 5

மாலைப் பொழுது நடப்பாராம்
மகிழ்ந்து திரும்பி வருவாராம்.
வேலை இன்றி நம்தாத்தா
வீணாய்ப் பொழுது கழியாராம். 6

எழுபது தாண்டி வயதாயும்,
இன்னும் நம்போல் இருக்கின்றார்.
தொழுது கடவுளை நித்தமுமே
தூய்மை பெறுவர் நம்தாத்தா. 7

கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி என்றும் வாழ்கின்றார்,
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழியைக் காட்டும் நம்தாத்தா. 8

சத்தியம் கூறல் அவர்கொள்கை ;
தருமம் காத்தல் அவர் கொள்கை ;
இத்தல மக்கள் எல்லார்க்கும்
இன்பவிடுதலை அவர் கொள்கை. 9

வெகுநாள் தாத்தா விரும்புகிற
விடுதலை விரைவில் பெறுவோமே
வெகுநாள் அவரும் வழிகாட்ட
வேண்டிக் கடவுளைத் தொழுவோமே. 10

மன மாற்றம்

சுப்பன் என்ற ஒரு பையன்
சுட்டித் தனங்கள் செய்திடுவான்.
அப்பா சொல்லைக் கேளாமல்
அதிகம் சண்டை போட்டிடுவான். 1

வழியில் யாரும் சென்றிடினே
வலிய வம்புக் கிழுத்திடுவான்
பழியைப் பிறர்மேல் போட்டுத்தான்
பயனில் லாமல் உதைபடுவான். 2

தப்பி ஒருநாள் மேஜைமேல்,
தனது மூக்குக் கண்ணாடி,
அப்பா வைத்து வெளியினிலே
அவசர மாகச் சென்றிட்டார். 3

சுப்பன் அதனைத் தானெடுத்துத்
துடைத்து மூக்கில் போட்டிட்டான்.
எப்படி யிருக்கிற தென்றறியும்
எண்ணத் துடனே ஓடிட்டான். 4

கண்ணா டியும்பெரி தானதினால்
கழன்று கீழே விழுந்ததுவே.
அண்ணா உடைத்தான் கண்ணாடி;
அதனைத் தங்கை கண்டிட்டாள். 5

அப்பா வந்தே கண்ணாடி
அங்கே காணக் கிடையாமல்
"சுப்பா நீதான் எடுத்தாயோ?
சொல்வாய் உண்மை" என்றிட்டார். 6

"அப்பா உங்கள் கண்ணாடி
அண்ணன் தானே உடைத்திட்டான்
தப்பு செய்தா னவனே" ன்றே
தங்கை கூறி நின்றிட்டாள். 7



"இல்லை, எனக்குத் தெரியாது,
இல்லை, இல்லை" என்றிட்டான்.
சொல்லை நம்பாத் தந்தையரும்
சுடச்சுட அடிகள் கொடுத்திட்டார். 8

சங்கைப் போல வேதொடர்ந்து
சப்தம் போட்டு அழுதிட்டான்.
அங்கே வந்த அம்மாவும்
அன்புடன் அவனைக் கூப்பிட்டு, 9

“கஷ்டப்பட்டு உன் தந்தை
கண்ணுடியினை வாங்கிட்டார்.
துஷ்டத் தனமாய் நீயதனைத்
தூள்தூ ளாக உடைத்திட்டாய். 10

சூட்டித் தனத்தை மாற்றிடவே
சொன்னுய் பொய்கள் துணிவுடனே.
பட்டாய் உதைகள் பலமாகப்
பலரும் பார்த்து இகழ்ந்திடவே. 11

நல்ல பிள்ளை என்றுன்னை
நாலு பேர்கள் புகழ்கின்ற
சொல்லைக் கேட்க என்மனமும்
துடிப்பதை நீயும் அறியாயோ? 12

யார்தான் வீடு கட்டிடுவார்
அஸ்தி வாரம் இல்லாமல்?
பாரில் பொய்நீ சொல்லிட்டால்,
பலநாள் நிலையா” தென்றிட்டாள். 13

சொல்லிய அன்னை மொழிகளினுல்
சுப்பன் உள்ளம் மாறியதே.
நல்லவன் என்றே புகழ்கின்ற
நாளும் அதுமுதல் ஆனதுவே. 14

அழைக்கும் விதம்

கண்டேனுல் பாப்பாவை
அன்பாய் அழைப்பேன்—'வா, வா'

கண்டேனுல் காகத்தை
அன்பாய் அழைப்பேன்—'கா, கா'

கண்டேனுல் புருவினை
அன்பாய் அழைப்பேன்—'ஆவ், ஆவ்'

கண்டேனுல் கன்றினை
அன்பாய் அழைப்பேன்—'மாவ், மாவ்'

கண்டேனுல் ஆட்டினை
அன்பாய் அழைப்பேன்—'பா, பா'

கண்டேனுல் பூனையை
அன்பாய் அழைப்பேன்—'ம்யாவ், ம்யா'

கண்டேனுல் சிங்கத்தை
என்ன சொல்வேன் தெரியுமா?

ஒன்றும் சொல்ல மாட்டேன்.
ஓடி ஒளிந்து கொள்வேன்!

அன்னையின் அனுமதி

அம்மா அம்மா விளையாட
அழைக் கிறார்கள் தோழர்கள்.
சும்மா சும்மா இருந்திட்டால்
சோம்பே றியாய்ப் போயிடுவேன். 1

கூட்டை விட்டுப் பறந்திடும்
குருவிக் குஞ்சைப் போலவே
வீட்டை விட்டு நாங்களுமே
விளையா டிடவே சென்றிடுவோம். 2

வெளியிற் சென்று எல்லோரும்
விளையா டிடவே நின்றிட்டால்
மழலைச் சொற்கள் கேட்டங்கே
வழியிற் செல்வோர் மகிழ்ந்திடுவர். 3

கிளியைப் போல நாங்களுமே
கேட்ட வற்றைச் சொல்லிடுவோம்.
பழகி யவர்மேல் நாங்கள்
பாசம் என்றும் கொள்வோமே. 4

மண்ணி னாலே வீடுகளை
மகிழ்ந்து நாங்கள் கட்டிடுவோம்,
பண்ணும் அந்த வீட்டினிலே
பறவைக் கூடும் கட்டிடுவோம். 5

அண்டை வீட்டுப் பெரியோர்போல்
அடிக்கடி சண்டை போடோமே
சண்டை போட நேர்ந்தாலும்
சடுதியி லதனை மறப்போமே. 6

'கீழோர், மேலோர்' என்றங்கே
கிழியத் தொண்டை கத்தோமே,
தோழர் யாவரும் ஒன்றாகத்
தொடர்பு என்றும் கொள்வோமே. 7

வெண்ணி லாவும் வந்தங்கே
விளையாட் டதனைக் கண்டிடவே
எண்ணி மேலே நிற்பதனால்
இப்பவே நானும் போயிடுவேன். 8

பாடல் ஆடல் செய்திடுவோம்
பனித்துளி போல வியர்த்திடவே.
தேட வேண்டாம் என்றனையே
சீக்கிர மாக வந்திடுவேன். 9

கருங்கடல்

கட்டில் போல முன்னும் பின்னும் கருங்கடலே—நீயும்
கரையை நோக்கி வந்து போவாய் பெருங்கடலே.

நீல வர்ண மேகந்தானே கருங்கடலே—இங்கே
நிழலை உன்மேல் வீசியதோ பெருங்கடலே.

நீண்டகரை நீதான் சேர்த்தாய் கருங்கடலே—அதனை
நீயே மீள முயல்வ தென்ன பெருங்கடலே.

உப்புத் தந்தே உணர்வளிக்கும் கருங்கடலே—நாங்கள்
உள்ளவரை மறந்திடோமேபெருங்கடலே.

பரந்த உன்றன் அளவுபோலக் கருங்கடலே—நாங்கள்
பரந்த எண்ணம் பெற்றிடுவோம் பெருங்கடலே.

தொண்டை மான்கள் என்றிட்டாலும்
கருங்கடலே—மிக்கத்
துணிவுடனே எதிர்த்து மோதும் பெருங்கடலே.

தோட்டி தொண்டை மானெவர்க்கும்
கருங்கடலே—நீயும்
தொட்டுப் பாதம் கழுவி நிற்பாய் பெருங்கடலே.

காற்றடிக்க மகிழ்வூட்டும் கருங்கடலே—நல்ல
கரையை நோக்கி இழுக்கின்ற பெருங்கடலே.

முத்துக்களைத் தோற்றுவிக்கும் கருங்கடலே—நல்ல
முத்துப் போன்ற எண்ணங்கொள்வோம் பெருங்
கடலே.

நிழல்

எங்கெங் கேநான் சென்றிடினும்
என்னைத் தொடர்ந்தே வந்திடுமே.

காதும் மூக்கும் இருந்திடினும்
கண்ணை மட்டும் காணவில்லை.



உருவம் என்னைப் போன்றிருந்தும்
உரையா தொன்றும் என்போலே.

மனிதர் மிருகம் மரங்களுமே
வளர்தல் சிறிது சிறிதாகும்.

அதுவும் அவைபோல் வளர்ந்திடுமே.
ஆனால் குறைந்தும் போயிடுமே.

வளர்தல், குறைதல் அதனில்நாம்
மாறி மாறிக் கண்டிலாம்.

வெள்ளையன், கருப்பன் என்றதற்கு
வித்தி யாசம் எதுவுமிலை.

யாரா யிருப்பினும் அதன்தோற்றம்
என்றும் கருப்பு நிறமாகும்.

உயிரும் உயிரில் லாப்பொருளும்
உலகில் யார்க்கும் பொதுவுடமை.

ஏழை யாயினும் அவன்பின்னே
என்றும் தொடர்ந்தே சென்றிடுமே.

சின்னஞ் சிறியார் நாமெல்லாம்
சீரிய இந்த நிழல்போலே,

பட்ச பாதம் இல்லாமல்
பாரில் நேராய் நடப்போமே.

பறவை வரம்

என்னிடம் கடவுள் வந்துனக்கு
எவ்வரம் வேண்டும் என்றிடினே,
இன்னிசை பாடும் பறவையதாய்
என்னை ஆக்கிட வேண்டிடுவேன். 1

விண்ணில் பறந்து சென்றிடவே
'விர்'ரென மேலே கிளம்பிடுவேன்.
கண்ணுக் கினிய காட்சியெலாம்
கண்டே திரும்பி வந்திடுவேன். 2



காடுகள் மலைகள் எல்லாமே
கடிதிற் சென்று கடந்திடுவேன்.
வீடுகள் மாளிகை யாவினுமே
விரும்பி யமர்ந்து வந்திடுவேன். 3

இதயத் தின்பம் பாய்ச்சிடவே
இனிய கீதம் பாடிடுவேன்.
சுதந்திரம் பெற்ற வாழ்வினிலே
துயர மின்றிக் களித்திடுவேன். 4

எப்படி உணவைச் சேர்ப்பதெனும்
ஏக்க மின்றி இருந்திடுவேன்.
" இப்படி நாமேன் இல்லை " யென
எண்ணிட மாந்தர் வாழ்ந்திடுவேன். 5

ஏமாற்றம்

ஒருநா ளிரவு படிப்பதற்கு
உட்கார்ந் தேன்நான் மங்கையுடன்
'கடகட' எனவே ஒருசப்தம்
கதவினி லிருந்து வந்ததுவே.

"யாரது ?" என்றே கேட்டிட்டேன்
யாரும் "நான்தான்" எனவில்லை.
திரும்பப் பதிலே வரவில்லை
திருடன் எனவே எண்ணிட்டேன்.
பயத்தா லென்னுடல் நடுங்கியது
பார்த்தாள் மங்கை சிரித்திட்டாள்.

* * *

"ஐயோ ! அச்சம் கொள்கின்ருய்
ஆணே நீதான்" என்றிட்டாள்.
எழுந்தேன் விரைவாய் இடம்விட்டு ;
எடுத்தேன் தடியைக் கைதனிலே ;
சென்றேன் அந்தக் கதவோரம்,
சிறிதும் அச்சம் இல்லாது.
"மிரட்டிச் சென்ற அச்சப்தம்
மீண்டும் வந்தால் உடனேயே,
தட்டிய அந்தத் திருடனைநான்
தடியால் அடிப்பேன்" எனு முன்னே
'கடகட' எனவே மறுபடியும்
கதவில் சப்தம் எழுந்ததுவே.
'பட்'டெனக் கதவைத் திறந்திட்டேன்
பார்த்தே னெல்லாப் பக்கமுமே.

யாரும் அங்கே காணவிலை.
"யார் அவர்?" என்றே கேட்டிட்டேன்.

*　　　*　　　*

இதனைக் கண்ட மங்கையுமே
'இடிஇடி' எனவே சிரித்திட்டாள்.

"கதவைத் தட்டிச் சென்றதுமே
கண்ணில் தோன்றுக் காற்றுத்தான்.

அடித்திடும் காற்றை அடிப்பதற்கோ
அத்தனை வீரம்!" என்றிட்டாள்.

குணங்கள்



சத்து நிறைந்த பாலினையே
தந்து நம்மைக் காத்திடுமே.
இத்தனை சாதுப் பிராணிதனை
எங்கே னும்நீர் கண்டீரோ ?



அண்டை ஊர்கள் சென்றிடவே
வண்டி யிழுத்துச் சென்றிடுமே.
மண்டிப் பயிர்கள் வளர்ந்திடவே,
மண்ணை நன்கு உழுதிடுமே.



நன்றி யுள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்றும்.
வென்றி கொண்ட வீரன்போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே.

காந்தித் தாத்தா முதலாகக்
கறக்கும் பாலை யாவர்க்கும்
சாந்தம் மிக்கது தாத்தாபோல்.
தஞ்சம் நம்மை அடைந்ததுவே.

கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் போதில் சிறகடித்தே
'எழுந்திரு, விழித்திடு' என்றதுவும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே.



பாலைக் குடித்துச் சாதுவைப்போல்
பஞ்சுக் காலால் நடந்திடுமே
வேலை யதற்கு வேறில்லை.
வீட்டில் எலிகள் பிடிப்பதுதான்.

உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே.
செத்தால் ஒன்று அவைகளிலே
சேர்ந்து யாவும் அழுதிடுமே.



நமக்காய் வைத்த பண்டமெலாம்
நாடித் தேடித் தின்றிடுமே.
நமக்காய்த் தைத்த சட்டைகளை
நாசம் ஆகக் கடித்திடுமே.



மிரண்டு அஞ்சி நடுங்கிடுவர்.
மிருக ராஜன் என்றிடுவர்.
தரணியில் அதற்குக் காடொன்றே
தகுதியென்று இறைவன் வைத்த
[னனே?

நிலைத்த ஆலமரம்

சாலைவ ழியிலோர் ஆலமரம்—அது
தங்க நிழலினைத் தந்தமரம்.
சாலைவ ழியாகச் செல்வோர்க்கு—அது
தளர்வு மாற்றியே தந்தமரம். 1



களைத்து வருந்தியே வந்திடுவார்—அங்குக்
கால்வலி தீர அமர்ந்திடுவார்.
இளைத்த அவர்க்கு இன்பந்தரும்—அன்றி
இன்னலும் தீர்த்து வழியனுப்பும். 2

பள்ளிச் சிறுவர்கள் ஓடிவந்தே—அங்குப்
பற்பல ஆட்டங்கள் ஆடிடுவார்.
அள்ளியே சுள்ளிகள் சேர்த்திடுவார்—நல்ல
அந்தணர் வேள்வி நடத்திடவே. 3

மாலையைப் போலவே எப்பொழுதும்—அது
மனங் குளிர்ந்திடச் செய்திடுமே.
காலைப் பொழுதிலே பல்துலக்க—அது
கனிவுடன் குச்சிகள் தந்திடுமே. 4

எத்திசையும் சுற்றிக் காற்றெரு நாள்—அங்கு
எமனைப் போலவே வந்ததடா.
எத்தனையோ உயிர் மாண்டிடவே—மிக்க
இன்னல் புரிந்தது சென்றதடா. 5

எண்ணரும் பொருள்கள் எத்தனையோ—அதில்
இன்புற்ற வாழ்வினை நீத்தனவே
கண்ணினைப் போன்றநம் ஆலமரம்—அந்தக்
கணக்கில் ஒன்றெனச் சேர்ந்ததுவே. 6

வேரற்று அம்மரம் வீழ்ந்ததுவே—பெரும்
வீரனைப் போலக் கிடந்ததுவே,
ஊரினில் யாவரும் கூடிவந்தே—அதன்
உன்னத நன்மையைப் பேசினரே. 7

அத்தனை மக்களும் வாடினரே—" இது
ஐயோ, போனது " என்றனரே
இத்தலம் விட்டே போயிடினும்—அது
எல்லோ ருள்ளத்தும் நின்றதுவே. 8

பல் உடைந்த முருகையன்

மோட்டார் ஓட்டி முருகையன்
மூர்க்கத் தனங்கள் மிக்கவனும்.

காட்டின் வழியாய் இரவினிலே
காரை ஓட்டிச் செல்லுகையில்,

விளக்கின் ஒளியைக் கண்டதுமே
வெருண்டு காட்டு மிருகங்கள்,



பார்வை சிறிதும் தெரியாது
பதறித் துடித்து நின்றிடுமே.

முயல்கள் வழியில் நின்றிட்டால்,
முருகன் காரை அவைமேலே

ஏற்றிக் கொன்று, அவைகளையே
எடுத்துக் கொண்டு போயிடுவான்.

நாட்கள் தோறும் முயல்கட்கு
நமனாய் அன்னவன் ஆனானே.

*　　　　*　　　　*

ஒருநாள் அந்த வழியினிலே,
உள்ள மைல்கல் ஒன்றிற்கு

வெள்ளை அடித்து இருந்ததனால்
வெள்ளை முயல்போல் தோன்றியதே.

முருகன் அதனை முயலெனவே
முட்டாள் தனமாய் எண்ணிட்டான்.

*　　　　*　　　　*

விட்டான் காரை அதன்மேலே
'பட்'டெனக் கல்லில் மோதியதே.

காரின் முன்னால் இருந்திட்ட
கண்ணா டியுமே நொறுங்கியதே.

பட்டான் காயம் பலமாகப்
பல்லில் இரண்டு போயினவே.

" முயலைக் கொன்று தின்றிட்ட
முன்னம் பற்கள் உடைந்தனவே.

ஐயோ ! உயிரைக் கொன்றேனே
அதனால் கடவுள் தண்டித்தார்."

என்றே எண்ணி முருகனுமே
இளகிய உள்ளம் பெற்றனனே.

மழை

கொட்டிடுவாய் மழையே—நாங்கள்
குதூகல மெய்திடவே.
சொட்டுச் சொட்டாய்த் தொடங்கி—மழையே
சோவெனப் பெய்திடுவாய். 1

வளைவு கட்டி வைத்தே—பெரியார்
வருகை நோக்குதல்போல்
வளைந்த வான வில்லும்—உனது
வருகை காட்டிடுமே. 2

காரிருள் மேக மதாய்—அலைபோல்
காற்றினில் சென்றிடுவாய்
மீறியே சென்றிடாது—மலைகள்
மோதிடப் பெய்திடுவாய். 3

நெற்றியில் நீர் சொரிய—நிதமும்
நிலத்தைப் பண்படுத்தி
வற்றிய குட்டை கண்டே—உழவர்
வடிக்கும் *நீர் துடைப்பாய். 4

சூரிய வெப்பமதால்—வாடிச்
சுருண்டு கிடக்குமுயிர்,
நேரிய உன் செயலால்—நன்கு
நின்று தலை தூக்கும். 5

* கண்ணீர்

வாரிப் பொருளை யெலாம்—நன்கு
வழங்கி நிற்போரை,
மாரி போலப் பொழிவார்—என்றே
வாழ்த்தும் மனிதகுலம். 6

கப்பல்கள் விட்டிடவே—நாங்கள்
காகிதம் சேர்த்து வைத்தோம்.
தப்பியே ஓடி டாதே—கொஞ்சம்
தயவுடன் பெய்திடுவாய். 7

பிறர் பொருள் விரும்பேல்

வேலை முடிந்தபின் வேலனும், சுப்பனும்
வீட்டினை நோக்கி விரைந்து வந்தார்.
சாலை வழியில் தரையில் கிடந்திட்ட
தங்கக்காப் பொன்றினைக் கண்ட சுப்பன், 1

"காப்புக்கிடக்குது யாரும் அறியாது
கையிலெடுத்து மறைத்திடெ"னக்
காப்பினை வேலனும் யாரும் அறியாது
கையிலெடுத்து மறைத்தனனே. 2

யார்தான் காப்பினை பெற்றிட லென்றே
எழுந்தது சண்டை இருவருள்ளும்.
நேரிய வழியினில் சேராப் பொருளால்
நீண்டதோர் சண்டையும் மூண்டதம்மா. 3

"நான்தான் முதலில் கண்டேன் எனக்கே
நியாயமாய் அப்பொருள் சேருமென்றும்,"
"நான்தான் முதலில் எடுத்ததாதலால்
எனக்குச் சேர்ந்திடும் பார்ப்போ"மென்றும்

'எடுத்தது நான்தான்'; 'கண்டது நான்தான்'
என்றேஇரு வரும் சண்டை செய்தார்
நடுத்தெரு வானதால் மக்க ளெல்லோரும்
நாடியே வந்தங்கு கூடிவிட்டார். 5

"என்ன நடந்தது, உண்மையைச் சொல்லெ"ன
இரண்டு சேவகர் வந்து விட்டார்
"என்னவோ காப்பாம் இவன்தான் எடுத்தான்"
என்றே சுப்பனும் கூறிவிட்டான். 6

"சுப்பனே கண்டான் ஆதலால் நானுமே
துளியும் விஷய மறிந்த தில்லை"
இப்படி வேலனும் கூறியதைக் கேட்டு
இழுத்துச் சென்றனர் சேவகர்கள். 7



தள்ளினர் சிறையில் மூன்று வருடங்கள்
தாங்கொணாத் துயரில் வாழ்ந்தனரே
பிள்ளை மனைவிமார் வேறு வழியின்றிப்
பிச்சை யெடுத்துயிர் வாழ்ந்தனரே. 8

ஊரார் பொருளுக்கு ஆசையின்றி நாம்
உண்மை யுரைத்து வாழ்ந்திடுவோம்.
பாரோர் போற்றிடும் நல்லகுணங்களைப்
பக்குவமாகவே பெற்றிடுவோம். 9

சமயோசித புத்தி

வயல்கள் நிறைந்த சிற்றூரில்
வாழ்ந்து வந்தான் ஒருவணிகன்.

சரவணன் என்பது அவன்பெயராம்.
சரஸ்வதி என்பவள் அவன் மனைவி.

தந்தி ஒருநாள் 'புறப்ப'டென
வந்தத னாலே வணிகனுமே,

பட்டணம் செல்ல அன்றிரவே
பொட்டணத் துடனே புறப்பட்டான்.

சரஸ்வதி மட்டும் தனியாகத்
தங்கி வீட்டில் இருந்திட்டாள்.

*   *   *

நடுஇர வதனில் திருடர்கள்தாம்
நால்வர் வீட்டில் நுழைந்திட்டார்.

சப்தம் கேட்டுச் சரஸ்வதியும்
சப்தம் போட முற்பட்டாள்.

"சப்தம் சிறிதும் போடாதே
ஜாக்கிர தை" யென மிரட்டினரே.

"கொன்று உயிரைப் போக்கிடுவோம்
கொண்டா அறைக்குச் சாவி" யென

வேறு வழிகள் இல்லாது
வெருண்டு சாவி கொடுத்திட்டாள்.

வாங்கி அறையைத் திறந்தவுடன்
வரிசையாய் மூவர் நுழைந்தனரே.

நால்வரில் ஒருவன் சரஸ்வதியை
நகரா திருந்து காத்துவந்தான்.

*　　　*　　　*

எண்ணம் பலபல சரஸ்வதிக்கு
எவ்வெவ் வாறோ தோன்றினவே.

யுக்தி யொன்று உதித்திடவே
உடனே பக்கம் இருந்தவனை

“உள்ளே பங்கு போடுகிறார்
உனக்குச் சிறிதும் இல்லாது

ஏமாந் தேநீ போகாதே
எழுந்து உள்ளே பார்த்திடுவாய்.”

என்றே கூற அவன் கேட்டே
எழுந்து உள்ளே பாய்ந்திட்டான்.

*　　　*　　　*

விரைவில் சென்று சரஸ்வதியும்
‘வெடு’க்கெனக் கதவைப் பூட்டிட்டாள்.

திருடர் நால்வரும் அறைக்குள்ளே
‘திரு,திரு’ எனவே விழித்திட்டார்.

சரஸ்வதி தெருவில் வந்திட்டாள்
சப்தம் போட்டுக் கத்திட்டாள்.

“ஐயோ திருடன் ஐயையோ
அபாய” மெனவே கத்திட்டாள்.

ஊரார் எல்லாம் தடியுடனே
ஒன்ருய்க் கூடி வந்திட்டார்.

கதவைத் திறந்து திருடர்களைக்
கயிற்ருல் கட்டி யிழுத்திட்டார்.

கச்சேரிக்குக் கொண்டே போய்க்
கைதி யாக ஆக்கிட்டார்.

*　　*　　*

ஊரார் எல்லாம் சரஸ்வதியை
ஒருங்கே புகழ்ந்து பேசிட்டார்.

சர்க்கார் மெச்சி அவளுக்குத்
தகுந்த பரிசும் தந்திட்டார்.

சரவணன் அக்கதை கேட்டதுமே
சந்தோ ஷத்தால் பூரித்தான்.

" சமயம் பார்த்து யுக்தி யுடன்
சரியாய்ச் செய்தாய் காரியத்தை.

புத்தி மிகுந்த உன்றனுக்குப்
'புருஷன் ஆனேன்" என மகிழ்ந்தான்.

வெண்ணிலா

மண்ணில் விளையாட்டினைத் தம்பி—சற்று
மறந்துநீ வந்திடுவாய் தம்பி,
விண்ணிலே காட்சியெலாம் தம்பி—நன்கு
அண்ணாந்து பார்த்திடுவாய் தம்பி. 1

விளையாட நல்லஒளி தம்பி—இங்கு
வெண்ணிலவும் வீசுதடா தம்பி.
தளராத வட்டமுகம் தம்பி—எங்கும்
தண்ணிழலே வீசுதடா தம்பி. 2

அம்மா வாசை யிருட்டில் தம்பி—மேலே
அளவற்ற மீன்கள் தோன்றும் தம்பி
இம்மா நிலத்தினிலே தம்பி—அவை
இருளினை ஓட்டுமோடா தம்பி. 3

எண்ணற்ற மீன்களடா தம்பி—வானில்
எத்தனை இருந்திடினும் தம்பி
வெண்ணிலா ஒன்றுபோலத் தம்பி—அவை
வீசியொளி தந்திடுமோ தம்பி. 4

பெரியார் ஒருவரைப்போல் தம்பி—பல
பேதையர்கள் கூடிடினும் ஆமோ ?
சரியாய் உணர்ந்திடுவாய் தம்பி—இதே
தாழ்வு உயர்வுணர்வாய் தம்பி. 5

பெரிதாய் வளர்ந்து நிலாத்தம்பி—இன்பப்
பேரொளியை வீசிடுமே தம்பி
பெரியார் தொடர்பும் அதுபோலே—மண்ணில்
பேதமையை ஓட்டி வளர்ந்திடுமே. 6

சிறிது சிறிதாகத் தம்பி—நிலாத்
தேய்ந்து மறைந்து விடும்தம்பி
சிறியோர் தொடர்புமடா தம்பி—அந்தத்
தேய் பிறையைப் போன்ற தடாதம்பி. 7

துன்ப இன்பங்களினைப் போலே—அது
தேய்ந்து வளர்ந்துவரும் தம்பி.
துன்பம் இல்லா விடிலோ தம்பி—இங்கு
இன்பமும் இல்லையடா தம்பி. 8

தாலாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.

சூடா மணியே!
துலக்கமாய் நின்றொளிரும்
வாடா மலரே, என்
மரகதமே, கண்வளராய். 1

கற்கண்டு சீனி
கனிவகைகள் எல்லாம்உன்
சொற்கேட்டு நானடையும்
சுகத்தினுக்கே ஈடாமோ. 2

பழுதிலா ஆடல்கள்
பற்பல நான் கண்டிடினும்
எழுதாத சித்திரமே
என் இன்பம் உன்செயலே. 3

கால்களை நீட்டி நன்கு
கையைத் தலைக்கு வைத்துப்
பாற்கடலிற் பள்ளிகொண்ட
பத்மநாபன் நீதானோ! 4

"தர்மம் குறைகையிலே
தாரணியில் நானுதித்தல்
கர்மம்" என உரைத்த
கண்ண பிரான் நீதானே! 5



சத்தியத்தைக் காப்பாற்றும்
தருமவான் காந்தியைப் போல்
உத்தமனே நீ யுதித்தாய்
உலகிற் சிறப்படைவாய். 6

காசினியில் கொல்லாமை
கருணை மிக்க செய்கையென்ற
ஆசியத்துச் சோதி
அருமைப்புத்தர்நீ தானே! 7

யான் பெற்ற நற்குமரா
இனிமை மழலையினால்
தேனொத்த செந்தமிழில்
திணைமாவும் சேர்த்தனையோ ! 8

முத்தம் நீ தந்தெனக்கு
மூடியிரு கண்களையும்
அத்தனையின் பங்களையும்
அகம்புத்தி விட்டனையே ! 9

அப்பா பெயரோங்க
அம்மா உளங்குளிர
இப்பாரில் நீ நடந்து
இன்ப வாழ் வெய்திடுவாய். 10

உரிமை பதிப்புற்றது.

ஒரே உலகம் — ரூ. 4-0-0

எழுதியவர்: வெண்டல் வில்கி

தமிழாக்கியவர்: தி. ஜ. ர.

ருஷ்யா, சீன, மத்தியக் கிழக்கு முதலிய போர் முனைகளையும் தலைவர்களையும் நேரிலே சந்தித்த அபூர்வ விஷயங்களையும் அந்த நாடுகளின் புதுமையான கிளர்ச்சிகளையும் பற்றி அனுதாபத்தோடு அற்புதமாய் வர்ணிக்கும் நூல்.

கோதைத் தீவு — ரூ. 2-8-0

வ. ரா.

ஒரு சமூகத்தில், இப்பொழுது ஆண் பிள்ளைகளுக்கு இருப்பதுபோல சகல உரிமை, பெருமைகள் பெண் மக்களுக்கு இருக்குமாகில் அந்தச் சமூகம் எப்படி நடைபெறும் என்பதைப் பற்றிய கற்பனைச் சித்திரம்.

புனர் ஜன்மம் — ரூ. 3-0-0

தமிலன்

மாஜி பெரிய குடும்பத்தைச் சேர்ந்த சாம்பு, தன் சகோதரி சந்திராவுக்கு எதி[illegible]மீன் கொடுக்கும் வரன் தேவை என்று விளம்பரம் செய்கிறான். அந்த விளம்பரத்தைப் பார்த்த தியாகராஜன் என்ற வாலிபன் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்துச் சந்திராவை விவாகம் செய்துகொள்ள மனுப் போடுகிறான். ஆனால், விவாகத் தினத்தன்று மாப்பிள்ளை வந்தபோது மணப் பெண்ணைக் காணோம். பிறகு மாப்பிள்ளையையும் காணோம். மேலும் நடக்கும் எதிர்பாராத சிக்கலான விஷயங்களை ஆசிரியர் ஹாஸ்ய முறையில் சித்திரித்திருக்கிறார்.

புத்தக நிலையம்

தெப்பக்குளம் : திருச்சி

Cover Designed & Printed by
Shakti Press Ltd., (Shanti Press),
Royapettah, Madras